உ

பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

105

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை துருதலம், மாம்பாக்கம்; விசய, புரட்டாசி; 25—9—53 தளிர்–52

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

கழுவாய் அற்ற குற்றம்

குற்றம் அறியாமையினால் உண்டாகின்றது. சிலர் அறிந்தும் குற்றம் செய்வதுண்டு. தன்னைக் காக்கும் வல்லமை யில்லாமையினால் அது நிகழ்வது. அறியாமற் செய்யுங் குற்றத்துக்கு மன்னிப்புக் கிடைக்கலாம்; அறிந்து செய்யுங் குற்றத்துக்குக் கழுவாய் எது?

எத்தகைய குற்றமாயினும் அறியாமற் செய்வதைச் சிறு பிழை எனக் கருதிப் பெரியோர் பொறுத்தல் கூடும்; ஆனால் அறிந்து செய்வதைப் பெரியோர் அங்ஙனம் எளிதில் ஒதுக்கிவிடுவா ரல்லர்; அதனைப் பெரும் பிழை எனக் கருதுவர்; பொறுத்தலும் அரிது.

அறிதல் வெறும் அறிவளவாக அறிதலும் உணர்வு (அநுபவ) அளவாக அறிதலும் என்று இருவகைப்படும்; அறிவளவாக அறிந்தும் குற்றம் செய்தல், தன்னைக் காத்துக் கொள்ளும் வல்லமை யில்லாமையால் அதாவது தன்னை அடக்கியாளும் வல்லமை யில்லாமையால் நிகழ்கின்றது; ஆனால் உணர்வளவாக (அநுபவ அளவாக) உணர்ந்தும் குற்றம் செய்தல், வேண்டுமென்றே பிறர்க்குத் தீங்குண்டாக்கும் நோக்கத்தால் நிகழ்வதாகும்! ஆதலால், இதுபேர் ஒறுப்புக்குரியது. உய்தி யில்லதோர் குற்றம் என்பது இத்தகையது!

எந் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டு; காரணம், அவை உணர்வு அளவாக உணராமல் அறிவு அளவாக அறிந்தவை! ஆனால், செய்ந்நன்றி என்பது அத்தகையதன்று; பிறரால் செய்யப்பட்டுத் தான் 'அநுபவ'த்தில் நுகர்ந்த நலங்கள்! அவற்றை மறந்து தீங்குண்டாக்குதல் எவ்வளவு கொடுமை! ஆதலால், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு!

உயவில்லாத அத்தகைய பெருங்குற்றமே பிறர்க்கு வன்சொல் வழங்குவது! காரணம், இன்சொல் இன்பந் தருதலைத் உணர் வளவாக உணர்ந்து இன்புற்றிருந்தும் வன்சொல் வழங்குதலால் என்க!

நலம் ஒரு சிறிதும் இல்லாமல் பேர் ஒறுப்புக்கும் இடமாயிருக்கும் வன்சொல் வழங்கலை ஏனோ மேற்கொள்ளவேண்டும் என்று அதனாலேதான் ஆசிரியர் மிகப் பெரிதும் இரங்கினார்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான்
எவன் கொலோ
வன்சொல் வழங்கு வது"

இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்—பிறர் வழங்கும் இன்சொல் தனக்கு மகிழ்வு தருதலை உணர்பவன், எவன்கொலோ வன் சொல் வழங்குவது- ஏனோ தான் பிறர்க்கு வன் சொற்களை வழவகுவது!

பேர் அறியாமையே யல்லது வேறில்லை என்றபடி. இன்சொல் இனிது ஈனும் என்றலின், வன் சொல் இன்னாமை ஈனும் என்பதுதானே பெறப்பட்டது. இருந்தும், அதனை வழங்குவது எவ்வளவு அறியாமை என்றவா யிற்று.

எவன் கொலோ, எவனோ; ஏனோ என்பது; என்ன நன்மை கருதி என்னும் பொருட்டு; ஒரு நன்மையுமில்லையே என்று இரங்கினார்!

காண்பான்—உணர்வான்; உணர்ந்தும், வன்சொல் வழங்குவது கழுவாய் அற்ற குற்றம் என அதன் கொடுமையும் புலப்பட நின்றது.

அவரவர் நுகர்வில் வைத்து அறிவுரை கூறும் முறையில் இத்திருக்குறள் அமைந்தது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு

முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

மலர்		தளிர்
5	விசய, புரட்டாசி, 25-9-53 வெள்ளி	52

தென்றல் ஒய்ந்தது தீந்தமிழர் என் செய்வார்!

தமிழ் நாடு இன்று பல துறை களிலும் சீர்திருத்தம் என்கின்ற ஒருவகைக்கோடையினால் மிகவும் வெதுப்பப்பட்டுவருகின்றது அத னால் தமிழ் மக்கள் பல்வேறு கட்சிகளுக்கும் பிணக்குகளுக் கும் உட்பட்டுக் கொதிப்புற்று வருகின்றனர். அக் கொதிப்பு அளவுக்கு மீறிப் போகாதபடி அவ்வப்போது அதனை ஆற்றி மாற்றிக்கொண்டு வந்தது, ஒரு தென்றல்! 17-9.53 வியாழன் மாலை 7-45 மணியோடு அத் தென்றல் ஓய்ந்து விட்டது. தென்றலை இழந்த தீந்தமிழர்கள் இனித் தம் கொதிப்புக்களை எவ் வாறு மாற்றிக் கொள்வார்களோ தெரியவில்லை.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் மறைவையே குறிப் பிடுகிறோம்.

இந்திய நாட்டிலேயே தமிழ் நாடுதான் இன்று பல துறைக ளிலும் விரைந்து மறு மலர்ச்சி யடைந்து வருகின்றது.

இம் மறுமலர்ச்சிக்கு வித் திட்ட தமிழ்ப் பெருமக்களில் மொழி சமயத் துறைகளில் மனோன்மணியம் ஆசிரியர்சுந்தரம் பிள்ளை அவர்களும், ஆசிரியர்மறை மலையடிகளாரும், அரசியல் துறை யில் வ. உ. சிதம்பரம் பிள்ளை, போன்றவர்களும், கவிதைத் துறையில், திரு. சுப்பிரமண்ய பாரதியாரும், கலைத் துறையில் யாழ் நூல் ஆசிரியர் சிவத்திரு விபுலானந்தர், நாடகப் பேராசிரி யர் பம்மல் சம்பந்தமுதலியாரும், தொழில் துறையில் திரு. வி. க. போன்றவர்களும் நினைவுகொள் ளத் தக்கவர்கள்.

இப் பெரியோர்கள் வித்திட்டு வளர்ந்த பல்வேறு இயக்கங் களும் பிறவும் இன்று எப்படி எப்படி எவ்வாறோ போய்க் கொண்டிருக்கின்றன. எங்கும் வேண்டுதல் இல்லாத கட்சிப் பிரி வுகளும், அவற்றை ஒட்டிய விளக்கங்களும், குழப்பங்களும் தாக்குதல் பேச்சுக்களும் எழுத் துக்களும் மிகுந்துவிட்டன. தமிழ்நாட்டின் பண்பாட்டையே, மொழி கலை சமயம் அரசியல் நலங்களையே, தலைமையாகப் பேணிப் பாதுகாப்பதற்கென்று ஓரியக்கம் இதுகாறும் அரும்ப வில்லை. இந் நிலையில் நாட்டில் குழப்பம் மிகாதவாறு தம் நடு நிலையான பேச்[illegible] எழுத் தாலும் [illegible] இழக் கப்[illegible]கொண்டு அ[illegible] வர்க்கு வேண்டும் அறிவுரையைத் தனித் தனியாகவும் கூட்டங்க ளிலும் கொடுத்துக்கொண்டு நாட்டை அமைதியில் நிறுத்தி வந்த பெருந் தலைவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்க ளாவார். கோடையின் கொடுமை யை மாற்றும் குளிர் தென்றல் போல் அவர்கள் தமிழ் நாட்டு மொழி, சமயம், அரசியல், தொழி லியல், கலையியல், சீர் திருத்தம் முதலிய பல துறைகளில் நய மான முறையில் பணியாற்றி எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டார்கள்.

உலகம் இன்று இருபெரும் பிரிவாக நின்று காந்தீயத்தை யும் மார்க்சீயத்தையும் பற்றி ஆராய்ந்து வருகிறது. இவை இரண்டுமே தனித் தனியாகப் பெரும்பயன் விளைப்பன அல்ல, இரண்டையும் இணைத்துப் பண் டைத் தமிழ் நாகரிகப் பான்மை யில் நிறுத்தி உலகம் அறம், பொருள், இன்ப நலங்களை அடைந்து உயர வேண்டும் என்று தம்மாலியன்ற வரையில் பேசியும் எழுதியும் வந்தவர் திரு. வி. க.

அவர்கள் ஏறத்தாழ 50 நூல் கள் எழுதியிருக்கிறார்கள். தமிழ் உரை நடையில் எளிமையும், இனிமையும் தூய்மையும் சேர்க் கும் அந்நூல்கள் தமிழ் மக்க ளுக்குப் பெரு வைப்பாகும். அந் நூல்கள் அனைத்திலும் பொது வாக அன்பு, அறம், பொய் யாமை, கொல்லாமை, உள்ளு ணர்வு, பொதுமை நோக்கு, பெண்மையின் உயர்வு, தெய்வ நாட்டம், சீர் திருத்தம், வாழ் வியல் நுட்பம் முதலியன பெரி தும் விளக்கி வற்புறுத்தப்பட் டிருக்கின்றன.

இனித் தமிழ் நாட்டின் பேச்சு மேடை அவரால் எவ்வளவு சிறப்

புற்றது! தூய தமிழில் உலகியல் செய்திகள் எவற்றையும் எழுதவும் பொது மேடைகளில் பேசவும் எளிதாக இயலும் என்கிற நம்பிக்கையை, வெளி நாட்டார் மொழியில் மயங்கிக் கிடந்த இடைக்காலத் தமிழகத்திற்கு ஊட்டியவர் திரு. வி. க. தான் என்று முடித்துச் சொல்லி விடலாம். அவர்கள் பேச்சின் இனிமையும் எளிமையுமே அவர்களுக்குத் 'தமிழ்த் தென்றல்' என்ற பெயரை மக்கள் சூட்டி மகிழும்படி செய்தன.

ஒரு தமிழ்த் தலைவர் இவ்வாறு சமயம், அரசியல், தொழிலியல், சீர்திருத்தம் முதலிய பல துறைகளில் அறிவியலோடு நில்லாமல் மக்களோடு ஈடுபட்டுப் பழகி, அவர்கள் தலைவர் என்று போற்றும்படி பணியாற்றியிருப்பதை நினைக்கின்றபோது உள்ளம் இறும்பூதெய்துகின்றது. பண்டைத் தமிழாசிரியர்கள் இப்படித்தான் இருந்தனர். தமிழ்ப் பண்பாட்டின் சின்னம் திரு. வி. க. என்றால் மறுப்பார் யார்?

அவர்களுடைய நலங்களையெல்லாம் பன்னிப்பன்னி அவர்கள் வரலாற்றை ஒட்டி எவ்வளவோ எழுதலாம், பேசலாம். எண்ணி உருகலாம், உயரலாம். ஆனாலும் அவர்கள் எழுதி வைத்துள்ள நூல்களைப் படித்துப் படித்துத் தெளிவும் திருத்தமும் பெறுவதே அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய கடமைகளில் பெரிய கடமையாகும்.

இனி அவர்கள் பெயரால் அவர்கள் இளமையில் அமைத்த இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் ஒரு மணி மண்டபம் அமைக்கத் தமிழ்ப் பெருமக்கள் பலர் முன் வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது. அவர்கள் முயற்சிக்குத் தமிழ் மக்கள் அனைவரும் நல்லாக்கம் செய்வர் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மக்களிடை நின்று நிலவும் பல்வேறு கட்சிப் பிணக்கு, கொள்கைப் பிணக்கு முதலிய வெப்பங்களை ஆற்றும் தென்றலாக இருந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் மறைவு தமிழ்மக்களுக்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அவரைப் போற்றுவதில் மட்டும் ஒரே நிலையில் திரண்டு நிற்கும் பல்வேறு பிரிவினரும் தத்தம் பிரிவிலுள்ள குறைகளை யுணர்ந்து திருந்தி ஒன்றுபட்டுத் தமிழ்ப் பெரியார் கண்ட, நாடு, மொழி, அரசு, சமயம், சீர்திருத்தம், ஆகிய நலங்களை ஓம்ப முற்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! குழப்பங்களைத் தெளிந்து கோடை வெப்பமும் மாறுமன்றோ?

வெல்க திரு. வி. க. தொண்டு!
விளங்குக அன்னார் புகழ்!!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இவைகள் யாவையும் கவனமாகக் கேட்டாள் செல்வி. சரி. இவனுடன் செல்வோம். போகும் வழியில் தந்திரமாக இறங்கி நம் உயிரை மாய்த்துக் கொள்ளலாம். அதுதான் சரியான வழி என முடிவு கட்டினாள். பின்பு தான் வருவதாகக் கூறினாள். காரில் இருவரும் ஏறினர். கார் பறந்தது.

போகும் வழியிலே பசி எடுக்கின்றது என்றாள் செல்வி. இன்னும் சிறிது நேரம் பொறு, நம் வீட்டை அடையலாம் என்றான்.

ஆம் கடைசியில் வீட்டிற்கே அழைத்துச் சென்று தன் வீட்டில் நடந்ததைக் கூறினான்.

அத்தியாயம் 10.

சின்ன தம்பி காரை எடுத்துக் கொண்டு தினகரன் வீட்டிற்குச் சென்றான்.

அப்பொழுதுதான் தினகரனுக்கு மருந்து கொடுத்துவிட்டுத் திரும்பினர் டாக்டர்.

சி. தம்பி: அவர் உடம்பு (தினகரன்) எவ்வாறு இருக்கிறது.

டாக்டர்: நேற்றை விட இன்று எவ்வளவோ சுமார். நீங்கள் உள்ளே சென்று பாருங்கள்; தற்போது வலி தவிர வேறு ஒன்றும் கிடையாது.

இவ்வாறு டாக்டர் கூறிவிட்டுச் சென்றார்.

உள்ளே சென்று மாமாவைக் கண்டான். பின்பு அவர்கள் எவ்வாறு வந்து சேர்ந்தார்கள் என விசாரித்தான். அவர்களுக்கு, தான் கார் ரிப்பேர் செய்ததும், மறுநாள் காலை வந்ததும், வரும் வழியில் ஏற்பட்ட விவரங்களையும் கூறினான்.

அவர்களை அழைத்துக் கொண்டு வா பார்க்கலாம் என்றார், தினகரன்.

உடனே காரை ஓட்டிச் சென்று அவளை அழைத்து வந்தான்.

ஆ செல்வியா! என்று ஆச்சரியத்துடன் தினகரனும் சுசிலாவும் வாய் விட்டுச் சொல்லினர்.

பின்பு ஒரு நல்ல நாளிலே புது வீட்டிலே திருமணம்! திருமணம் யாருக்கு?

சின்னதம்பிக்கும், செல்விக்குந்தான்! ஆம் செல்வி செல்வமாகப் புது வீட்டில் குடியேற இருவரும் அதில் வாழ ஆரம்பித்தனர்.

மங்கல மென்ப மனைமாட்சி
மற்றதன் நன்கலம் நன்மக்கட்
பேறு.

(முற்றும்) —மணி.

திருக்குறள் அதிகாரச் செய்கை

(நூற் பகுதியில் மட்டும்; இது, எல்லா அதிகாரங்கட்கும் பொது.)

I. அதிகாரத் திருக்குறள்களையும் அவற்றின் கருத்துக்களையும் எங்கும் பரவச் செய்தல்.

பரவச் செய்யும் முறை:

1. இக் குறள்களையும் கருத்துக்களையும் பல்லாயிரம் பல நூறாயிரக் கணக்கில் தமிழ், ஆங்கிலம், இந்தி முதலிய மொழிகளில் அச்சிட்டு நாளும் எங்கும் வழங்கிக்கொண்டிருத்தல்.

2. இக் குறள்களிலிருந்து பல சிறு தொடர்கள், செய்யுளாகவும் உரைநடையாகவும் தொகுத்தெடுத்துப் பரப்புதல்;

3. இவற்றின் தொடர்பாகச் சிறு சிறு விளக்க நூல்கள் வெளியிடல்.

4. இக் குறள்களையும் கருத்துக்களையும் மனப்பாடம் செய்வித்தல், பரிசுகள் வழங்கல்.

5. (அ) இல்லங்களிலும் பொது நிலையங்களிலும் விரிவுரை மேடைகளிலும், அட்டைகள், துணிப்படாம், கற்கள் முதலியவற்றில் அமைத்து நிறுவுவித்தல்.

   (ஆ) குருகுலத்தில் செய்கைப் பகுதியிலும் இவ்வாறு செய்வித்தல்.

6. விரிவுரைகள் வாயிலாகவும் அறிவுரைகள் வாயிலாகவும் நெடுகப் பரவச்செய்தல்.

7. கடிதங்கள் எழுதுகின்ற காலங்களில் வாய்ப்புள்ளபோதெல்லாம் அதிகாரக் குறள்களைப் பயன்படுத்தி வருதல்.

8. அதிகாரத்துக்கமைந்த பலர் உரைகளையும், அதிகாரக் குறள்களும் கருத்துக்களும் பிற நூல்களிலும் திருக்குறளிலும் ஆளப்பட்டிருக்கும் இடங்களையும் முறைகளையும் தொகுத்து விளக்குதல்.

9. குறள்களைத் தாங்கியமைந்த வழிநூற் பகுதிகளையும் தொகுத்து வெளியிடுதல்.

10. குறளைச் சிந்தித்துவருகின்ற காலங்களில் புதியவாகத் தோன்றுங் கருத்து நுட்பங்களை விழிப்பாய்க் குறித்துச் சேர்த்துவருதலும், வெளியிடுதலும் செய்தல்.

11. அதிகாரத்தில் அமைந்த மொழித்திறம், கலை, தொழில், அருள், பணித் திறங்கள், இலக்கியம், வரலாறு, அரசியல், பொருளறிவு (விஞ்ஞானம்), உவமைகள், புது மொழிகள், புது வழக்குகள், அறிவதற்கமைந்த இலக்கணக் குறிப்புகள், திருவள்ளுவரின் வித்தகம், பாகு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

சைவத் திருமுறைகள்

(முன் தொடர்ச்சி)

சமயத்தின் இவ்வியல்புக்கு மனித வரலாறு சான்று பகர்கின்றது. சமயத்தைத் தன்னலத்துக்காகப் பயன்கொண்ட அரசர்களும் புரோகிதர்களும் தோன்றுவதற்கு முன்பே, முதன் முதலில் உயிர்களின் அறிவு, உலகத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்கிய அந்நாளில், உலகத்து எல்லா மக்களினத்துக்கும் பிறப்புரிமையாய் அது தோன்றிற்று.

வரலாற்றிற்கு மிகவும் முற்பட்ட ஒரு காலத்தில், மக்கள் குகையிலும் காடுகளிலும் வதிந்து வந்த அந்த நாட்களில் முதன் முதலாகத் தம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்களையும், விலங்குகளையும், தம்மினின்றும் பிரித்து உணரும் மன உணர்வு எழுந்த காலத்தில், பற்பல நிலையில் தமக்குப் புறம்பாக உள்ள உலகமும், தம் உள்ளே தோன்றிய எண்ண உலகமும், ஆசை உலகமும் முரணாக இருந்ததை அம் மக்கள் உணர்ந்தார்கள். ஆனால் இவ் வகப் புற உலகங்களின் முரண்பாடுகளைப் போக்கி அவற்றை ஓர் இயைபுக்குக் கொண்டு வர இயலும் என்ற ஒரு நம்பிக்கையும் இருந்தது. அதோடு இம் முரண்பாடுகளில் ஒரு சக்தி இயங்கி வந்ததையும் நம்பினார்கள். அவற்றில், அச் சக்தியோடு தாங்களும் ஒன்றினால், அம் முரண்பாடுகளிலிருந்து தாமும் பிழைக்கலாம் என்றும் கருதினார்கள்.

இவ்விதம் வித்தூன்றிய சமயமே, காலந்தோறும், மக்களின் மனத்தோடும், அறிவோடும், உணர்வோடும், நாகரிகத்தோடும் படிப்படியே வளர்ந்து வந்துள்

ளது; உயிரின் இயல்பான உணர்வின் ஆழத்தில் எழுந்த ஒரு தேவையை அது இதுவரை கொடுத்துதவியுள்ளது. மாண்புமிக்க மக்கள் பலரை (இருபாலினும்) இவ்வுலகத்துக்கு அளித்துதவியுள்ளது. சமுதாய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது. மக்கள் வாழ்வு சிதறுண்டு சீர்குலையாதிருக்க, பல ஒழுங்குகளை வகுத்து நன் நடக்கைக்கும், திருந்திய நெறிக்கும் வழிகாட்டியுள்ளது.

அந்தோ! இவ்வறிவியல் யுகத்தில், ஏன் அது தன் நிலை இழக்க வேண்டும்?

அது காலத்தோடு அடியொத்து வைக்காது பின் தங்கிவிட்டதென்னவோ உண்மை. நெடு வழி பின் தங்கிய காரணத்தால் ஒளி மங்கியதைப் போல் தோற்றுகின்றது. இந்நிலை, அதன் இயல்புக்கே மாறானதும், இதுவரைக்கும் அதன் வரலாற்றில் காணப்படாத ஒரு பேரளவுக்கு வளர்ச்சிகுன்றியதுமாகும்.

அதன் உண்மையில் அசையா உறுதி கொண்ட ஒரு சிலரும், அறிவுக்கும் மேம்பட்ட ஒரு விழுமிய அறிவை அது தன்னகத்தே தாங்கியுள்ளதையும், அது தற்கால அறிவியல் யுகத்தையும் கடந்து அப்பாற் செல்லும் இயல்புடையதையும், உரிய முறையில் தெளிவாக்காது தயங்கியுள்ளனர்.

—பா. வரதராசன்.

Telegrams: "RAMBROS"
N.Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

இனி எவரோ....?

எல்லார்க்கும் பொதுமையராய் இலங்குதிரு வள்ளுவர்போல்
சொல்லார்க்கும் தமிழ்ப்பெரியார் கலியாண சுந்தரனார்
பல்லார்க்கும் உரியரெனப் பலகட்சி களும்போற்ற
நல்லார்க்குள் நல்லாராய் வாழ்ந்திருந்தார்! நமைப்பிரிந்தார்! (1)

அறைவதெங்ஙன்? அந்தோ! நம் தமிழகத்தின் அவலநிலை!
செறிவுமிகத் தமிழ்வானில் திங்களும்நன் ஞாயிறும்போல்
கறையில்புகழ்க் கலியாண சுந்தரனார், கலைஞருயர்
மறைமலையார் எனஇவர்தாம் வயங்கிவந்தார்! மறைந்தகன்றார்! (2)

மாற்றாரும் மதித்துவக்கும் மாட்சிமிகு பெருஞ்சான்றோர்!
காற்றோடு பெருமழையும் கலந்ததுபோல் சொற்பொழிவே
ஆற்றவல்ல அரியபெரு நாவல்லோர்! அளவின்றிந்
நூற்றாண்டில் தமிழ்க்கிவர்தாம் விளைத்தநலம் நுவலரிதால்! (3)

தொழிலாளர் பெருந்தலைவர், தூய்மைமிகு காந்தீய
வழியாளர், சமரசசன் மார்க்கநெறித் திருத்தொண்டர்,
எழிலாளும் பேச்சாளர், எழுத்தாளர், இதழாளர்,
முழுதாகத் தம்வாழ்வை மன்பதைக்கே முற்றுவித்தோர். (4)

எழுத்தினிலும் பேச்சினிலும் இனியதொரு புதியநடை
அழுத்தமிக அழகுமிக ஆற்றல்மிக அருமைமிகப்
பழுத்துயர்தம் பெரும்புலமைப் பயனாகப் படைத்தளித்துச்
செழித்துயரத் தமிழ்நாட்டைச் செய்வித்தார் திரு. வி. க. (5)

தேசியக் கவிஞருயர் பாரதியார், சிதம்பரனார்,
மாசில் அன்னை வசந்தையார், வ. வே. சு. ஐயர், மற்றும்
ஆசிரியர் கதிரைவேற் பிள்ளை, அருட் குமரகுரு
தாசர்முதற் சான்றோர்கள் தகப்புழ்வோர் திரு. வி. க. (6)

தென்னாடே திரு. வி. க., திரு. வி. க. வே, தென்னா(டு)
என்னுமுண்மை மற்றவர்தாம் இனிமைமிக வரைந்தளித்த
பொன்னனைய வரலாற்றுப் புத்தகத்தால் புலனாகும்.
நன்மைமிகும் அந்நூலின் நலம்பலவும் அளப்பரிதால்! (7)

தென்றமிழ்நாட் டுக்காந்தி, சிறந்தஇரா யப்பேட்டை
மன்பெருமா மறைமுனிவர், மணவழகர், தமிழ்த்தந்தை,
நன்றெளிய சாதுநல்லார், நவசக்தி ஆசிரியர்
என்றெல்லாம் பெயர்பெற்ற எம்மான்! நீ எங்ககன்றாய்? (8)

எனைப்பலவாம் சூழல்களில் எத்துணையோ மக்களொடு
நினைப்பதற்கும் அரியவகை நெருங்கிமிகப் பழகின்றும்
முனைத்துமிக இறையுணர்வு முதிர்ந்தொளிரத் தம்வாழ்க்கை
அனைத்திலுமே கடைப்பிடித்த அருஞ்செய்தி பெருஞ்சிறப்பா (9)

அரசியலே இந்நாளில் ஆற்றல்மிக வளர்ந்துவரும்
விரைசுமிக என்றாலும், மிகஅதன்கண் அறிவாற்றல்
பாசுமுயர் அனுபவம்நம் பண்பாடென் றிவ...லெலாம்
உரைசெயின்நம் திரு. வி. க. ஒப்ப, இனி உள...ரே? (10)

அரியதிருக் குறள்விளக்கம், முருகனல தழகெனும்நூல்,
பெரியபுரா ணப்பதிப்பு, பெண்பெருமை, இளமைவிருந் (து)
உரியபுகழ்த் தமிழ்த்தென்றல், தமிழ்ச்சோலை, உள்ளொளியும்!
மருமனித வாழ்க்கையும்போல் நூல்வரைவோர் இனிஎவரோ? (11)

அறங்கரையும் நாவினுயர் அந்தணராம் பெருந்தகையார்,
சிறந்துயர்ந்த பேரறிஞர், சிவநெறிநற் றிருவாளர்,
மறந்தெனினும் தமக்கெனத்தாம் வாழாத பிறர்க்குரியார்
நிறைந்துயர்சீர்த் திரு. வி. க. நிகராவார் இனிஎவரோ, (12)

—புலவர். முருகவேள் B. O. L.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

பாட்டழகு, பிற அதிகாரங்களோடு அமைந்த தொடர்பு ஒற்றுமை வேற்றுமை முதலிய சிறப்புகள்மேல் விளக்க நூல் வெளியிடுதல்.

12. அதிகாரப் பொருள் பற்றி, முன்னும் பின்னும் தமிழ் நூல்களிலும் வேறு பிறமொழி நூல்களிலும் தக்கோர் உரைத்திருக்கும் கருத்துக்களையும் முறைகளையும் தொகுத்து அவற்றினும் மேம்பட்ட வகையில் திருவள்ளுவர் உரைத்திருக்கும் கருத்துக்களையும் முறைகளையும் எடுத்துக்காட்டல் முதலியன.

"முல்லைக் கொடி"

(குருகுலக் கிழமை வெளியீடு)

16-10-53-கலைமகள் விழாவுடன்

5-ம் ஆண்டு நிறைவுறும்

23-10-53-ல் 6-ம் கிளை

முதல் தவிர் தவிர்க்கும்.

நேயர்கள் தம் கைபொப்பங்களை 15-10-53-க்குள்

கிடைக்கும்படி அனுப்பிவைப்பார்களாக!

தமிழர் கடமை

நாம் கண்திறந்து வாழ்வதற்காகக் கண் இழந்தார், நாம் வளமாக வாழத் தம் வாழ்வைப் பணயம் வைத்தார். நாம் ஒற்றுமையுடன் பணியாற்றி வாழத் தம் வீட்டையும் சிறைக் கோட்டமாக்கிக் கொண்டார். அவரால் நம் வாழ்வில் தென்றல் வீசிற்று. மொழியில் தேன் வழிந்தது. தொண்டில் பெருமிதம் துலங்கிற்று.

இதற்கென அவர் கைக்கொண்ட வழிகள் சொற்பம். அவை: தன்னலமற்ற தொண்டு. பதவி பணம் இவைகளைப் பாராமை. காட்சிக்கு எளியராக வாழ்தல். தாய் மொழி தாய் நாடு உயர, துலங்க, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் எண்ணம். யாவற்றிற்கும் மேலாக அறத்தினின்று வழுவாமை. இவையே.

தமிழன் உள்ளத்திலே வாழ்ந்து நாவில் நடமாடும் திரு. வி. க. என்னும் தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார், 17-9-53 மாலை $7\frac{3}{4}$ மணிக்கு மறைந்தார், தமிழர்களைத் தவிக்க விட்டு.

அவர் பிறந்த காலத்திய நிலை வேறு, தற்போதைய நிலை வேறு.

அவர் பிறந்தபோது காங்கிரஸ் லட்சியமே இன்னதென முடிவு செய்யப் படவில்லை. அன்னி பெசண்டும் காந்தியடிகளும் கருத்து வேறுபாடு கொண்டிருந்த காலம் அது.

தொழிலாளர்கள் புழுக்களாக மதிக்கப்பட்டிருந்த காலம் அது; தமக்கென ஒரு சங்கம் இலாய், வெள்ளையனால் வேட்டையாடப் பட்டார்கள் தொழிலாளர்கள் அப்போது.

தொழிற் கூட்டங்களிலும் பிற கூட்டங்களிலும் ஆங்கிலமே ஒலித்தது. தமிழ் ஒலிக்கவில்லை.

இதழ் (பத்திரிகை) கள் தமிழில் வளம் பெறவில்லை. எழுத்தாளர்களும் சொற்பம்.

மேற்கூறிய ஒவ்வொன்றிலும் திரு. வி. க. உழைத்தார். உழைத்தார் என்றால் அற்ப சொற்பமாக அல்ல. அல்லும் பகலும் உழைத்தார்; இன்று நாம் காணும் அளவு ஒவ்வொன்றும் மேலுற உழைத்தார்.

தம்முடைய 35 வது வயதில் அவர் தம்முடைய இரண்டு குழந்தைகளையும், மனைவியையும் இழந்துவிட்டபின், துறவியாகி விடவில்லை ஆனால் அதை விட மேலான, பொது வாழ்வில் ஈடுபட்டார். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக' 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் நோக்கத்தோடு, தம் நலத்தைத் துறந்து இயற்கையையும் எதிர்த்துப் போராடி உழைத்தார்.

தமிழ் மொழிக்கு அவர் நடையால் ஒரு சிறப்பு உண்டாயிற்று. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், திருக்குறள் விரிவுரை, தமிழ்த் தென்றல் முதலியன எடுத்துக் காட்டுகளாம்.

அவர் பேச்சால் தமிழ்மொழி ஓர் இலக்கியச் சமயச் சொற்பொழிவாற்றும் மொழிமட்டுமன்று, தொழிலியக்க, சீர்திருத்த, சமதர்மச் சொற்பொழிவாற்றத் தக்க மொழியுமாம். என்பது எடுத்துக் காட்டப்பட்டது.

மொழிக்கு அவர் செய்த சேவையைவிடத் தொழிலாளர்கட்குச் செய்த சேவை மறக்க முடியாது. முதன் முதலில் சென்னையில்—ஏன் இந்தியாவிலேயே தொழிற் சங்கத்தை நிறுவிய பெருமை அவரைத்தான் சாரும். அப்போது அவருக்குத் துணை செய்தவர்கள் டாக்டர் அருண்டேலும் B. P. வாடியா அவர்களும் ஆவார்கள். பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள் அவரால் அடைந்த நன்மைகளும் அவர் தலைமையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தால் ஆங்கிலேயர் ஆட்சி அடைந்த அல்லலும் ஏட்டிலடங்கா.

அன்னி பெசண்ட் அம்மையாரோடு அவர் காங்கிரசில் ஹோம் ரூல் இயக்கத்தில் பணியாற்றினார். பிறகு காந்தியடிகளுடன் கலந்து ஒத்துழையாமை இயக்கத்தில் பாடுபட்டார். அது மட்டுமன்று, தமிழ்நாட்டில் மூலை முடுக்குகளெல்லாம்புகுந்துதீவிரச் சொற்பொழிவாற்றிக்காங்கிரசை வல்லமையுள்ளதாக்கினார். பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் தமிழகத்தில் அவரால்தான் உண்டானார்கள் என்றால், அது மிகையன்று.

பயன் கருதாத, தன்னலமற்ற ஒரு ஒப்பற்ற தமிழ்த்தொண்டரை, வீரமும் அமைதியும் புரட்சியும் பெண்மையும் சன்மார்க்கமும் சீர்திருத்தமும் பொதுமையும் ஒருங்கே கலந்த ஒருவீரரை இன்று தமிழகம் இழந்து தவிக்கிறது. தேம்புகிறது, கண்ணீர் விடுகிறது.

தமிழர்கள் முன் ஒரு முறை தவறு செய்தனர். தமிழ்க்கடல் மறைமலை அடிகளார் மறைந்த போது—அவர் உள்ள காலத்தில் அவருக்கு நன்றி செலுத்தாததையும் அவரைப் பயன்படுத்திக் கொள்ளாததையும் எண்ணி ஏங்கினர்.

அதே தவறை இப்போதும் செய்தனர். நமக்காக உழைத்து உருக்குலைந்த, இரண்டு கண்ணும் இழந்த, பணம் சிறிதும் அற்ற பண்புமிக்க சான்றோருக்கு, எவ்வித உதவியும் நாம் செய்ய முன் வரவில்லை. தமிழ் நாடு தன் கடமையின் தவறியது. மொழிப் புலவரை செயல் வீரரை அவமதித்தது. எந்த நாடு இந்த நிலையில் உள்ளதோ அது முன்னேற்றமடையாது வீழ்ச்சியே அடையும்.

தவறு செய்த நாம் அதற்குக் கழுவாய் தேடல் வேண்டும். அஃது என்ன? அவருக்கு விருப்பமான பணியினைத் தொடர்ந்து செய்தல். அது ஒன்றுதான் அவர் உயிர் அமைதியுற நாம் செய்யும் நல்ல தொண்டு ஆகும்; தன்னலமற்ற நாட்டு மொழித் தொண்டே அது என்பது.

வாழ்க திரு. வி. க.

—நலங்கிள்ளி.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குத்தெரு சென்னை 1.

செல்வி

(அத்தியாயம் 8.

(முன் தொடர்ச்சி)

கார் ஓடி வந்து கந்தசாமி முதலியின் வீட்டு எதிரில் நின்றது. தினகரன் இறங்கிப் பார்த்தார். வீடு பூட்டிக் கிடந்தது. பக்கத்தில் விசாரித்தார். அவர்கள் கண்கள் கலங்கின. அவருக்குப் பித்தம் ஏற்பட்டது போல் ஆயிற்று. அண்ணா என்று உளற ஆரம்பித்தார். சுசிலாவுக்கும் சின்னதம்பிக்கும் யாது செய்வது என்று புரியவில்லை. அவர்கள் உடனே காரில் ஏறிக் கொண்டு ஊருக்குத் திரும்பினார்கள். கார் வேகமாக ஓடிற்று.

ஓடி வந்த கார் திடீரென ஓர் இடத்தில் நின்றுவிட்டது. பெட்ரோல் இருந்தது. ஆனால் நின்ற காரணம் அவர்களுக்குப் புரியவில்லை. பின்புதான் புரிந்தது. காரில் உள்ள இயந்திரத்தில் ஓர் இடத்தில் ஒரு சிறிய ஆணி விழுந்து விட்டது. அதனால் விசிறி சுற்றவில்லை. என் செய்வான்? சின்னதம்பி அருகில் உள்ள ஒரு மாட்டு வண்டி பேசி அதில் சுசிலாவையும் தினகரனையும் பக்கத்து ஊரில் உள்ள இரயில் நிலையத்துக்கு அனுப்பினான். மூன்றும் வகுப்பில் இடம் நெருக்கடியாக இருக்கும் என்றும் இரண்டாம் வகுப்பில் செல்லுமாறும் கூறினான். மேலும், சென்றதும், வைத்தியரை அழைத்து மருந்து கொடுக்குமாறு செய்யவும் என்று சுசிலாவிடம் கூறினான்.

சின்ன தம்பி இரண்டு ஆட்களை அழைத்து அவர்களுக்குக் கூலி கொடுப்பதாகக் கூறி ஏறக்குறைய 4 மைல் தூரத்தில் உள்ள ஒரு டவுனுக்குக் காரை தள்ளிச் சென்றான்.

அந்த டவுனில் கார் ரிப்பேர் செய்யும் இடத்தில் விட்டு ரிப்பேர் செய்தான். பொழுது போய்விடவே அன்று இரவு அங்கேயே தங்கி மறுநாள் விடியற்காலையில் புறப்பட்டான்.

அத்தியாயம் 9.

அன்று இரவு செல்வி எங்குத் தங்குவது என்றே புரியவில்லை. ஊருக்குள் செல்லாமல் ஊரின் வெளியே படுத்து உறங்கினாள். தாம் போவது யாருக்கும் தெரியக் கூடாது என அவ்வூரை விட்டகன்றாள்.

ஆம் துன்பப்படுவதினும் இறப்பதே மேல். உண்ண உணவில்லை எங்குச் சென்று வாழ்வது? உம், சித்தப்பா! அவர் அல்ல அவன்; சித்தப்பா அல்ல. துரோகி. உடனே திரும்பி வருவதாகக் கூறிச் சென்றான். திரும்பினானா? அதுதான் இல்லை. பணம் பணம் அதை அவனே வைத்துக் கொளுத்திக் கொள்ளட்டுமே. யார் வேண்டாம் என்றது. நல்ல காலம்; தலைவிதி என்று கூறுகிறார்கள். ஏன்? ஆளை ஏமாற்ற இனியும் அவனைச் சென்று காண்பதா? தாய் இறந்தாள், தந்தை இறந்தார். இனியும் நாம் நம் உயிரை வைத்துக் கொண்டிருப்பதா? கூடாது, இறந்தே தீரவேண்டும், இவ்வாறு பல விதமாக செல்வி நடந்து கொண்டே எண்ணமிட்டாள்.

போகும் வழியிலே ஓர் இடத்தில் மரங்கள் அடர்த்தியாகக் கிடந்தன. இங்கு உள்ள ஒரு மரத்தில் உயிரை விடலாம் என்று முடிவு கட்டினாள். உடனே தன் புடவையின் முந்தானையை எடுத்து ஒரு கிளையில் சுற்றினாள்.

பாம், பாம் என்ற அலறலுடன் கார் அங்கு வந்து நின்றது. ஆம் அதில் உள்ளவர்கள் சின்னதம்பி ஒருவன்தான. அவன் இறங்கினான்.

'செல்வி' அவன் இறங்குவதைக் கண்டு யாது செய்வதெனப் புரியாமல் திகைத்து நின்றாள்.

சி. தம்பி: உற்றவரையும் மற்றவரையும் விட்டு இங்கு உன் உயிரை விடக் காரணமென்ன?

செல்வி: உற்றவர்களோ மற்றவர்களோ யாரும் இல்லை. தாங்கள் தயவு செய்து காரில் சென்று விடுங்கள்; என்னைப் பற்றிக் கவலை வேண்டாம்.

சி. தம்பி: அதற்காக உன் அருமையான உயிரை விட்டு விடுவதா? பரந்த உலகத்திலே நீ வாழ உனக்கு இடம் இல்லையா? அல்லது இல்லை என்று சமூகம் கூறிற்றா?

செல்வி மௌனமாகவே நின்றாள். சி தம்பி யாதுக்கும் கவலைப்பட வேண்டாம். நீ என்னுடன் வந்தால் உனக்கு வேண்டியவற்றைச் செய்து தருவேன்; இல்லையானால், இங்கு வருபவர்களிடம் நீ உன் உயிரை மாய்த்துக் கொள்ள வழிதேடினாய் என்று கூறிவிடுவேன். அப்புறம் நீ போலீஸில் தவிக்க வேண்டியதுதான். நான் உன்னை விட்டு இப்பொழுதே சென்று விடுவேன். ஆனால் நீ உன் உயிரை மாய்த்து கொள்வாயே என்பதனால் நான் நிற்கிறேன். ஒன்று என்னுடன் வருகிறாயா? அல்லது போலீஸிற்குச் செல்கிறாயா?

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)